**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.**

Calendar)
Preliminary Register) CC.197/2024
Sessions)

Deposition of witness for (Prosecution P.W.4
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | **வேல்முருகன்** | -- | |
| Father 's Name | **தங்கமணி** | Calling | |
| Village | **எம்.கல்லுப்பட்டி** | Religion | |
| Taluk | **பேரையூர்** | Age | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 01st Day of August 2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை மாவட்டம் எம்.கல்லுப்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.05.2023 ம் தேதி கிருஷ்ணன்கோவில் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று சிகிச்சையில் இருந்த முருகேசன் என்பவர் பேச முடியாத நிலையில் இருந்ததால் அங்கு அவருடன் உதவிக்கு இருந்த அவரது தாயார் அமிர்தம் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று பின்னர் காலை 09.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண்.77/2023 இதச பிரிவுகள் 279, 337 ன் படி வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3**. பின்னர் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து ஸ்ரீவில்லிபுத்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் –II அவர்களுக்கு அனுப்பியும் விசாரணையின் ஒரு நகலை நானே புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துராமலிங்கம் மற்றும் ரவிக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5**. மேற்படி சாட்சிகள் இருவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் அமிர்தம், பாலமுருகன், பால்ச்சாமி, ரமேஷ்கண்ணன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த முருகேசன் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துபோய்விட்டதாக தகவல் கிடைக்கப்பெற்று 24.05.2023 ம் தேதி மேற்படி இதச சட்டப்பிரிவுகள் 279, 337 லிலிருந்து இதச பிரிவுகள் 279, 337, 304(A) என சட்டப்பிரிவுகள் மாற்றம் செய்து நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தேன். வழக்கினை

மேல்விசாரணைக்காக வழக்குக் கோப்பினை காவல் ஆய்வாளார் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். இது சம்பபந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

சம்பவம் 21.05.2023 ம் தேதி இரவு 08.30 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். 22.05.2023 ம் தேதி காலை 09.00 மணிக்கு சம்பவம் பற்றி தகவல் கிடைத்தது என்றால சரிதான், மதுரை சென்று வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை செய்தேன். எப்போது எனக்கு தகவல் கிடைத்தது என்றும் மருத்துவமனைக்கு எப்போது சென்றேன் என்றும் முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்து மதுரைக்கு சென்றதால் குறிப்பிட்டு சொல்லவில்லை. புகாரானது சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் பதிவுசெய்யவில்லை என்றால் சரியல்ல. 22.05.2023 ம் தேதி பாலமுருகன் என்பவர் இருசக்கரவாகனத்தில் கோபாலபுரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது விபத்தை பார்த்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல, கலசகலிங்கம் கல்லூரி அருகே நின்று கொண்டிருந்ததாகச் சொல்லியுள்ளார். சம்பவ இடத்துக்கு அருகே சுமார் 200 மீட்டர் தூரத்தில் கலசலிங்கம் கல்லூரி உள்ளது. சம்பவ சாலை போக்குவரத்து நெரிசல் நிறைந்தது என்றால் இரவு நேரம் என்பதால் அதிக போக்குவரத்து இல்லை. சம்பவ இடம் அதிக போக்குவரத்து நிறைந்த பகுதி என்றும் வழக்கிற்காக மறைத்து சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவ சாட்சிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றும் வழக்கிற்காக சாட்சிகளாக காட்டியுள்ளேன் என்றும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கிருஷணன்கோவில் காவல்நிலையத்தில் இருந்து நீதிமன்றத்துக்கு 1 மணி நேரத்திற்குள் வந்துவிடலாம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை, புகார் வாக்குமூலம் 3 நாட்கள் காலதாமதமாகத்தான் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> இல்லை

சாட்சியின் கையொப்பம்

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

R V RAJA KUMAR

Digitally signed by R V RAJA KUMAR
Date: 2026.08.01 18:54:19 +0530

**Chief Judicial Magistrate,
Virudhunagar District at
Srivilliputtur.**